Appendix I.

[*Vide* answer to Strared Question No. 133 on page 6.]

The main home tract of Mecheri breed of sheep is Omalur taluk of Salem district. Sheep of this breed is also found in the adjoining taluks of Omalur in Salem district and Coimbatore district. When this breed was recognised as one of the good meat breed that will come up well under certain climatic and soil conditions, steps were taken to preserve and develop this breed of sheep in its home tract and to introduce this breed in other parts of this State, where this breed can thrive well.

Steps were taken to establish a sheep farm in Omalur taluk to see that only good types of rams are marked for breeding purpose. A detailed survey was made in the whole of Omalur taluk of Salem district for a suitable site for establishing a sheep farm. But unfortunately, no adequate suitable site was available for establishing a sheep farm in the area.

The following are the schemes implemented by the Department for the improvement of sheep farm in Mecheri tract :—

I. *Sheep and wool extension centres.*—Eight sheep and wool extension centres covering the whole of the Omalur taluk have been established to improve the village flocks. Each sheep and wool extension centre is manned by a Livestock Assistant, Grade II assisted by a flockman. Improved rams are distributed to the breeders at the rate of one ram for 50 ewes of breedable age or at two rams for 100 ewes on exchange basis. These rams and the flocks covered by these rams are systematically inspected by the staff and the improvements of the flocks by means of their progenies watched by taking the weight of the animals. They are declared the exclusive property of the custodians after they are maintained for three years. All the rams with the custodians which are not true to their type are castrated. Systematic treatment against contagious and non-contagious diseases including treatment for ecto and endo parasites is also undertaken. Systematic vaccination of sheep against sheep pox, Anthrax and Enterotoxaemia wherever necessary is conducted. Treatments for minor ailments are also given.

Twenty rams in each sheep and wool extension centre are also maintained as reserve rams to meet casualties among the distributed rams. During mating season, the reserve rams are also lent to the needy breeders and got back after the breeding season is over. The Sheep Demonstration Unit, Salem at Athur is manned by a Veterinary Assistant Surgeon, assisted by one senior flockman and one junior flockman. They undertake periodical deticking and deworming of sheep in the whole district and train the breeders on the scientific breeding and management of the sheep to get good results. Thus these centres serve to help the breeders of this taluk to maintain and improve the improved breeds of this type of sheep. The extent of improvement of this breed effected by the department would be evident from the fact that the sheep in most of the village flocks are more or less uniform

in colour and size as against the olden days when only a few breeders had good stock of this breed of sheep, while the rest of them had flocks with different colours and sizes not true to type.

II. *Sheep Demonstration Unit.*—The unit is worked by a Veterinary Assistant Surgeon, with the Assistance of two flockmen. He arranges for a systematic tour of the area for attending to the problems of rearing sheep in the area. Periodical deticking and deworming of sheep and treatment of ailing cases are also attended. Free vaccinations for all contagious diseases of sheep are also carried out.

III. *Introduction of sheep among farming communities.*—The rearing of sheep was generally confined to some sections of people only. In order to multiply the production of sheep the rearing of sheep was also introduced among farmers. Sixty farmers in Krishnagiri Veterinary district and 60 in Salem Veterinary district have been granted a loan of Rs. 680 and subsidy of an equal amount, to rear flocks of sheep and multiply them. Under this scheme, each breeder has obtained a foundation stock of 20 ewes and 2 rams of the approved breed of the area of which 10 ewes and 1 ram are supplied under full subsidy.

IV. *Sheep development under agricultural grant.*—Improved Mecheri ram are distributed on ram to ram exchange basis to the breeders in other places where mutton type of sheep are reared and the climatic and soil conditions are similar to that of the home tract of the Mecheri sheep, through the panchayat unions to improve the quality of sheep and mutton.

V. *Sheep Breeding Research Station, Chinnasalem.*—Even though a sheep farm could not be established in Omalur taluk, a flock of Mecheri breed of sheep is reared at the Sheep Breeding Research Station, Chinnasalem in South Arcot district. One thousand Mecheri ewes and 50 Mecheri rams were purchased as foundation stock under the Crash Programme. The surplus rams in the farm are being distributed in the panchayat unions for breeding purposes.

From the above it could be seen that possible steps had been taken to improve the Mecheri sheep in the State and in addition to the present achievements, more benefits by improvement of this breed are envisaged in due course through the various schemes implemented as above.

இணைப்பு I

பதில்.—சேலம் மாவட்டம், ஓமலூர் தாலூகாவே மேச்சேரி இன ஆடுகளின் தாயகமாகும். சேலம் மாவட்டத்தில் ஓமலூர் தாலூகாவை அடுத்துள்ள தாலூகாக்களிலும், கோவை மாவட்டத்தில் சில தாலூக்காக்களிலும் இந்த இன ஆடுகள் காணப்படுகின்றன. இந்த இன ஆடுகள் அதிக இறைச்சியைத் தரும் என்றும் குறிப்பிட்ட சில கால நிலைமைகளிலும்

மண்வள நிலைமைகளிலும் அவை நன்ருக வளருமென்றும் உணரப்பட்டதால் அவை மிகுதியாகக் காணப்படும் ஓமலூர் வட்டத்தில் அவற்றைப் பாதுகாத்து மேம்படுத்தவும், இம் மாநிலத்தில் இந்த இன ஆடுகள் நன்ருக வளரும் என்று கருதப்படும் இடங்களில் அவற்றைப் பேணி வளர்க்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இனப் பெருக்கத்திற்காக நல்ல இன ஆட்டுக் கடாக்களை மட்டும் விற்பனை செய்யுமாறு பார்த்துக்கொள்வதற்காக, ஓமலூர் தாலூகாவில் செம்மறி ஆட்டுப் பண்ணை ஒன்றை நிறுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. செம்மறி ஆட்டுப் பண்ணை ஒன்றை நிறுவுவதற்கான தகுந்த இடத்தைத் தெரிந்தெடுப்பதற்காக, சேலம் மாவட்டம், ஓமலூர் தாலூகா முழுவதிலும் விரிவான ஆய்வு நடத்தப்பட்டது. ஆனால் அப்பகுதியில் செம்மறி ஆட்டுப் பண்ணை நிறுவுவதற்குத் தகுதியான இடம் எதுவும் கிடைக்கவில்லை.

மேச்சேரிப் பகுதியில் ஆடுகளை மேம்படுத்துவதற்கென கால்நடை வளர்ப்புத் துறையினர் கீழ்க்கண்ட திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றனர் :—

1. **செம்மறி ஆடு-கம்பள வளர்ச்சி நிலையங்கள்.**—கிராமப் பகுதிகளில் ஆட்டு மந்தைகளை மேம்படுத்துவதற்கென, ஓமலூர் தாலூகா முழுவதும் செம்மறி ஆடு-கம்பளி வளர்ச்சி நிலையங்கள் எட்டு நிறுவப்பட்டுள்ளன. ஒவ்வொரு நிலையத்திலும் கால்நடை உதவியாளரும் (தரம் 2), அவருக்கு உதவியாக மந்தைக் காப்பாளரும் (Flockman) பணியாற்றுகின்றனர். ஆடு வளர்ப்பவர்களுக்கு மேம்பாடு செய்த ஆட்டுக் கடாக்கள் வழங்கப்படுகின்றன. இனப்பெருக்க வயதடைந்த ஐம்பது பெண் ஆடுகளுக்கு ஒரு ஆட்டுக்கடா என்ற வீதத்தில் அல்லது நூறு பெண் ஆடுகளுக்கு இரண்டு ஆட்டுக்கடாக்கள் என்ற வீதத்தில் பரிமாற்ற அடிப்படையில் ஆட்டுக்கடாக்கள் வழங்கப்படுகின்றன. இந்த ஆட்டுக்கடாக்களையும், பெண் ஆடுகளையும் பணியாளர்கள் முறையாகப் பார்வையிடுகின்றனர். ஆட்டு மந்தைகள் மேம்பாடு அடைகின்றனவா எனப் பார்ப்பதற்காக, அவற்றின் குட்டிகளின் எடையை அவர்கள் பரிசோதித்துப் பார்க்கின்றனர். அவற்றை மூன்ருண்டுகளுக்குப் பேணி வளர்த்தபிறகு அவற்றை வைத்துள்ளவர்களின் தனி உடைமைகளாக அவை ஆகிவிடும். இனம் மாறுபடுவதாகத் தெரியவரும் ஆட்டுக்கடாக்கள் மலடாக்கப்படுகின்றன. தொற்று நோய்கள், ஏனைய உடல் புற ஒட்டுண்ணிகள் (Ectoparasites) உடல் அக ஒட்டுண்ணி நோய்கள் (Endoparasites) ஆகியவற்றினின்றும் ஆடுகளுக்கு முறையான பாதுகாப்பு அளிக்கப்படுகின்றது. செம்மறி ஆடுகளுக்கு வரும் அம்மை (sheep-pox) நச்சுசீக்கட்டு (Anthrax) குடலில் நச்சுப் பொருள்கள் சேர்க்கை (Enterotoxaemia) ஆகியவற்றினின்றும் பாதுகாப்பு அளிக்க ஆடுகளுக்கு முறையாக அம்மைக் குத்தப்படுகின்றது. சிறு நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

வழங்கப்பட்ட ஆட்டுக்கடாக்களில் எவையேனும் மாண்டுவிட்டால் அவற்றிற்குப் பதிலாக வழங்குவதற்கென ஒவ்வொரு நிலையத்திலும் இருபது ஆட்டுக்கடாக்கள் வைத்துவரப்படுகின்றன. இனப்பெருக்கப் பருவத்தில் இந்த ஆட்டுக்கடாக்களும் இனப்பெருக்க வேலைக்காகத் தேவையெனக் கேட்பவர்களுக்கு வழங்கப்பட்டு, அப்பருவம் முடிந்த பிறகு அவை திரும்பப் பெறப்படுகின்றன. ஆத்தூரிலுள்ள சேலம், செம்மறி ஆட்டுச் செய்முறை விளக்கப் பிரிவில் கால்நடை உதவி மருத்துவர் ஒருவரும், முது நிலை மந்தைக் காப்பாளர் ஒருவரும் (Senior Flockman), இள நிலை மந்தைக் காப்பாளர் ஒருவரும் பணியாற்றுகின்றனர். மாவட்டம் முழுவதும் குறிப்பிட்ட காலத்துக்கொருமுறை ஆடுகளின் மேல் ஒட்டியிருக்கக்கூடிய உண்ணிகளையும், புழு பூச்சிகளையும் அகற்றுவதற்கு (deticking and deworming) இவர்கள் நடவடிக்கை மேற்கொள்கின்றனர். அத்துடன், ஆடுகளை விஞ்ஞான முறையில் இனப்பெருக்கம் செய்து நிர்வகித்து வருவதில் ஆடு வளர்ப்பவர்களுக்கு அவர்கள் பயிற்சி அளிக்கின்றனர். இந்த வகையைச் சேர்ந்த மேம்பாடுற்ற இன ஆடுகளைப் பேணி அவற்றை இன்னும் மேம்படுத்துவதற்காக இந்தத் தாலூகாவிலுள்ள ஆடு

வளர்ப்பவர்களுக்கு இந்த நிலையங்கள் மேற்சொன்ன முறையில் உதவி செய்கின்றன. கிராம ஆட்டு மந்தைகளில் உள்ள ஆடுகளின் உருவ அமைப்பும் நிறமும் ஏறத்தாழ ஒரே மாதிரியாக இருக்கின்றன என்பதைக் காணுமிடத்து, இந்த இன ஆடுகளை மேம்படுத்துவதற்காகத் துறையினர் மேற்கொண்ட முயற்சிகள் பயனளித்துள்ளது புலனாகும். பண்டைய நாட்களில் இந்த இன ஆடுகளை ஒரு சிலரே மிகுதியாக வைத்திருந்தார்கள். ஆடு வளர்க்கும் ஏனையோர் வெவ்வேறு நிறங்களையும் உருவ அமைப்புகளையும் கொண்ட, பல இன ஆடுகளையே வைத்திருந்தனர்.

2. **செம்மறியாடுகள் செய்முறை விளக்கப் பிரிவு :**—இந்தப் பிரிவில் கால்நடை உதவி மருத்துவர் ஒருவரும், மந்தைக் காப்பாளர் இருவரும் பணியாற்றுகின்றனர். சம்பந்தப்பட்ட பகுதியில் ஆடுகள் வளர்ப்பது குறித்த சிக்கல்களைக் கவனித்து அவற்றிற்குத் தீர்வுகாணும் பொருட்டு, உதவி மருத்துவர் அப்பகுதியில் முறையான சுற்றுப்பயணத்துக்கு ஏற்பாடு செய்கிறார். ஆடுகளின் மேல் உள்ள ஒட்டுண்ணிகளும், பூச்சி புழுக்களும் குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை நீக்கப்படுகின்றன. நோயுள்ள ஆடுகளுக்குச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. செம்மறி ஆட்டினைப் பற்றும் எல்லா தொற்று நோய்களுக்காகவும் இலவசமாக அம்மை குத்தப்படுகிறது,

3. **உழவர்கள் ஆடுகளை வளர்ப்பதற்கு ஊக்கமளித்தல்.**—மக்களில் பொதுவாகச் சில பிரிவினரே ஆடுகளை வளர்த்து வந்தனர். ஆடுகளின் எண்ணிக்கையைப் பெருமளவுக்கு அதிகரிப்பதற்காக, உழவர்களும் ஆடுகளை வளர்க்க ஊக்கமளிக்கப்படுவதற்கான திட்டம் கொண்டுவரப்பட்டது. கிருஷ்ணகிரி கால்நடை மாவட்டத்தில் 60 உழவர்களுக்கும், சேலம் கால்நடை மாவட்டத்தில் 60 உழவர்களுக்கும், ஆட்டு மந்தைகளை வளர்த்து ஆடுகளின் எண்ணிக்கையைக் கூடுதலாக்குவதற்கென, ரூ. 680 கடனும் அதற்குச் சமமான உதவித் தொகையும் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் ஆடுகள் வளர்ப்பவர் ஒவ்வொருவரும் அப்பகுதிக்குரிய ஏற்பளிக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்த 20 பெண் ஆடுகளையும் 2 ஆட்டுக்கடாக்களையும் பெற்றுள்ளார். அவற்றுள் 10 பெண் ஆடுகள் குறித்தும் ஓர் ஆட்டுக்கடா குறித்தும் முழு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

4. **வேளாண்மை மானியத்தின் கீழ் செம்மறி ஆடு மேம்பாடு.**—மேச்சேரி ஆடுகள் மிகுதியாக உள்ள பகுதிகளில் நிலவுவதைப் போன்ற அதே கால நிலைமையும் மண்வளமும் உள்ள இடங்களில் மிகுந்த இறைச்சி தரும் ஆடுகள் வளர்க்கப்படுமாயின், அந்த இடங்களில் உள்ள ஆடு வளர்ப்பவர்களிடமிருந்து அவர்களது ஆட்டுக்கடாக்களைப் பெற்று, அவற்றிற்குப் பதிலாக மேச்சேரி ஆட்டுக்கடாக்கள் வழங்கப்படுகின்றன. செம்மறி ஆடுகளின் தரத்தையும் இறைச்சியின் தரத்தையும் மேம்படுத்துவதற்காக ஊராட்சி ஒன்றியப்புகள் மூலமாக மேற்படி வேலை நிறைவேற்றப்படுகிறது.

5. **சின்னசேலம் செம்மறி ஆடு இனப்பெருக்க ஆய்வு நிலையம்.**—ஓமலூர் தாலூகாவில் செம்மறி ஆட்டுப்பண்ணை ஒன்றை நிறுவ இயலாவிட்டாலும், தென்னார்க்காடு மாவட்டம் சின்ன சேலத்திலுள்ள செம்மறி ஆடு இனப்பெருக்க ஆய்வு நிலையத்தில் மேச்சேரி ஆட்டுமந்தை ஒன்று வளர்க்கப்படுகிறது. விரைவுத் திட்டத்தின் கீழ் 1,000 மேச்சேரி பெண் ஆடுகளும், 50 மேச்சேரி ஆட்டுக்கடாக்களும் அடிப்படை ஆடுகளாக வாங்கப்பட்டன. இப்பண்ணையில் உள்ள தேவைக்கு மேற்பட்ட ஆட்டுக்கடாக்கள் இனப்பெருக்கக் காரியங்களுக்காக ஊராட்சி ஒன்றிப்புகளில் வழங்கப்படுகின்றன.

இம்மாநிலத்தில் மேச்சேரி இன ஆடுகளை மேம்படுத்துவதற்கு இயன்ற எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன என்பதை மேற்கூறியவற்றிலிருந்து அறியலாம். மேலே குறிப்பிட்டுள்ளவாறு நிறைவேற்றப்பட்ட பல்வேறு திட்டங்கள் மூலமாக நாளடைவில் இந்த இன ஆடுகளை மேம்படுத்துவதன் மூலம் மேலும் பயன்களைப் பெறத் திட்டமிடப்பட்டுள்ளது.